LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம்
நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கலைமாணித்தேர்வு 2010/2011
(ஜனவரி/பெப்ரவரி 2013)

**PSS – 4103 இலங்கையின் இனமோதல்**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி 1ல் மூன்று வினாக்களையும், பகுதி 11ல் ஒரு வினாவையும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடைதருக.

---

பகுதி -1

01. "இலங்கைத் தேசியவாத இயக்கத்தின் மிக ஒழுங்குபடுத்தப்பட்டதோர் அமைப்பே இலங்கைத் தேசிய காங்கிரசாகும்" இதனைப் பின்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) காங்கிரசில் ஏற்பட்ட பிளவுகள் (12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் இனமுரண்பாட்டில் அதன் தாக்கங்கள் (13 புள்ளிகள்)

02. "1948/1949ம் ஆண்டுகளில் மலையக மக்களது குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டமை ஒரு அடிப்படை உரிமை மீறலாகும்."

(அ) அடிப்படை உரிமை என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? (5 புள்ளிகள்)

(ஆ) ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் மலையக மக்களது குடியுரிமை, வாக்குரிமையைப் பறித்தமைக்கான ஏதுக்களை விளக்குக. (10 புள்ளிகள்)

(இ) சோல்பரி அரசியல் யாப்பில் "சிறுபான்மையோர் காப்பீடுகள்" என்ற ஏற்பாடுகள் இருந்தபோதிலும் மலையக மக்களுக்கெதிரான குடியுரிமை, வாக்குரிமைச் சட்டங்களை தடுக்கமுடியாமல் போன காரணங்களைத் தருக. (10 புள்ளிகள்)

03. "இலங்கையின் இன முரண்பாட்டில் மொழி பாரிய பங்களிப்பைச் செலுத்தியுள்ளது." பின்வருவனவற்றுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(அ) சுதந்திரத்திற்கு முற்பட்டகால மொழிக்கொள்கை (10 புள்ளிகள்)

(ஆ) 1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள மொழிச்சட்டம் கொண்டுவந்தமைக்கான காரணங்கள்.

(15 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) 1915ம் ஆண்டு சிங்கள – முஸ்லிம் இனக்கலவரம் (12 புள்ளிகள்)

(ஆ) சம பிரதிநிதித்துவக் கோரிக்கை (13 புள்ளிகள்)

பகுதி – 11

05. இலங்கையின் இன முரண்பாட்டுத்தீர்வு முயற்சியில் இந்தியா அல்லது நோர்வேயின் பங்களிப்பினை விமர்சனரீதியில் பரிசீலிக்குக.

(25 புள்ளிகள்)

06. "மாகாணசபைகளின் அதிகாரத்தினை பலமிழக்கச் செய்யும் சட்டமூலமே திவி நெகும சட்டமாகும்." பகுப்பாய்வு செய்க.

(25 புள்ளிகள்)